10.02.2026

அ.வ.எண். 58/2022

வா.சா.2 – திரு.சந்திசேகர், த/பெ.அவிநாசி கவுண்டர்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 10.02.2026 is accordance with the provision of Act X of 3331

**3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன், Power Loom-மில் வேலை செய்து வருகிறேன். எனக்கு தமிழ், நன்கு படிக்க தெரியும். 1970 ம் ஆண்டில் பிறந்தேன். என் தகப்பனார் 1978 ல் தாவா சொத்தை கிரயம் பெற்றார். என் தகப்பனார் தாவா சொத்தை கிரயம் பெறும்போது எனக்கு 8 வயது என்றும், மேற்படி விவரங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1920, 1940 ம் ஆண்டுவாக்கில், என் தகப்பனாருக்கு கிரயம் கொடுத்த வி.கே.சுப்பிரமணியம் வகையறாவுக்கும், 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாரான கணபதியப்ப கவுண்டர் மற்றும் அவரது சகோதரர் மாரப்ப கவுண்டருக்கும் இடையே ஆவணங்கள் ஏற்பட்டதா என்றால் தெரியாது.

2. வி.கே.சுப்பிரமணியம் வகையறா பாகம்செய்து கொண்ட 1 பகுதி சொத்தை என் தகப்பனார் கிரயம் பெற்றார் என்றால் சரிதான். மீதமுள்ள சொத்தின் விஸ்தீரணம் தெரியாது என்றால் சரிதான். என் தகப்பனார் பெயரில் உள்ள சொத்திற்கு தென்புறமும், வடபுறமும், மீதி பாக சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான்.க.ச.எண்.713/2C மற்றும் 2E காலைக்கு இடையே 2D என்ற உட்பிரிவு உள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.713/2D என்பது கூட்டு வண்டிப்பாதை ஆகும். என் தகப்பனார் பூமிக்கும், பிரதிவாதி பூமிக்கும் இடையே வண்டிப்பாதை உள்ளது என்றால் சரிதான்.

3. என்னுடைய தகப்பனாரான வாதி, அவர் கிரயம் பெற்ற வி.கே.சுப்பிரமணியம் வகையறா, என் தகப்பனாருக்கு சொத்தை கிரயம் கொடுத்த பின்னிட்டு, அவர்களது பாகத்தில் புதிதாக தடங்களை ஏற்படுத்திய விவரம் எனக்கு தெரியுமா என்றால் என் தகப்பனாருக்கு கிரயம் கொடுத்த பின்னிட்டு தடம் ஏற்படுத்தவில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், க.ச.எண்.713 காலையில் தென்புறமாக, வி.கே.சுப்பிரமணியம் வகையறா தடம்

ஏற்படுத்தியுள்ளனர் என்றால் சரியல்ல. என் தகப்பனார் RDO விடம்கொடுத்த விண்ணப்பத்தின் தற்போதைய நிலை என்ன என்று எனக்கும், என் தகப்பனாருக்கும் தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 வரைபடத்தில், சர்வேயர் வழங்கியதற்கான கையொப்பமோ அல்லது முத்திரையோ இல்லை என்றால் சரிதான். தமிழ்ச்செல்வன் தான் வழங்கினார். நான் சொல்வது போல் தமிழ்ச்செல்வன் வரைபடம் வழங்கவில்லை என்றால் சரிதான்.

4. வழக்குரை சொத்து விவரத்தில், க.ச.எண்.713/2D காலை குறிப்பிடவில்லை என்றால் க.ச.எண்.713/2C காலையில் தான் சொத்து உள்ளது. என் தகப்பனார் க.ச.எண்.713/2C காலையை பொறுத்து மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் தகப்பனார் எந்த காலத்திலும், சொத்தை சர்வே செய்யவில்லை என்றும், அதற்கான வரைபடம் வாங்கவில்லை என்றும், என்னுடைய தகப்பனார் RDO விடம் மனு கொடுக்கவில்லை என்றும், அதனால் தான் என் தகப்பனார் RDO விடம் கொடுத்த மனு மற்றும் சர்வேயர் வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur